THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Friday, the 28th January 1972.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, MR. CHAIRMAN (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

MR. CHAIRMAN : Question 36 is withdrawn.

Loss of seats in Parliament

* 37 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state whether there are proposals under the consideration of the Government to compensate the loss of seats in parliament due to the implementation of Family Planning?

நாடாளுமன்றத்தில் இழந்த இடங்கள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்தியதால், நாடாளுமன்றத்தில் இழந்த இடங்களை ஈடு செய்வதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆம்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, என்ன திட்டங்கள் என்று அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 1951-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி பாராளுமன்றத்திற்கான இடங்களை ஒதுக்க வேண்டுமென்ற வகையில்தான் மத்திய அரசை மாநில அரசு அணுகுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, 1971-ல் சென்சஸ் எடுத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் பாராளுமன்றத்திற்கான இடங்கள் எந்தத் தேர்தலில் நிர்ணயிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 1971-ம் ஆண்டு சென்சஸ் கணக்கு இன்னும் அதிகார பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. அதன்படிகூட இப்போதிருக்கிற ஒரு இடத்தை நாம் இழக்க நேரிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. இதையொட்டித்தான் 1951-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின் அடிப்படையிலே நாடாளுமன்றத்திற்கான இடங்களை நம் மாநிலத்திற்கு ஒதுக்க வேண்டுமென்று நாம் கேட்கிறோம்.

[28th January 1972

திரு. கே. ராஜாராம் : இந்த அபிப்ராயத்தை நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் வற்புறுத்த அரசாங்கம் எண்ணியிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : என்.டி.சி.—யில் அரசாங்கத்தின் சார்பாக வலியுறுத்துவதாக இருக்கிறோம். அது மட்டுமல்லாமல், நாடாளு மன்றத்தில் திரு. மாறன் இதனையொட்டி ஒரு தீர்மானத்தைக் கொடுத்தார். ஆனால் மூன்றில் இரண்டு பங்கு அதற்கு வாக்குகள் வேண்டுமென்ற அளவில் அந்தத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டது என்றாலும் கருத்து வலியுறுத்தப் பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : அரசியல் சட்ட 82-வது பிரிவின்படி சென்சஸ் எடுத்து முடிந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் மறுபடியும் அந்தக் கணக்கை வைத்து அடுத்த தேர்தலை நடத்த வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. 82-வது பிரிவில் இருக்கிற வரையில் 1951-ம் ஆண்டு சென்சசை வைத்து எப்படி இடம் ஒதுக்க முடியும் என்று முதலமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது முடியாது, திருத்தம் தேவை என்பதற்காகத்தான் 1951-ம் ஆண்டுக் கணக்கை வைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்கிறோம். இப்படி ஆண்டுக்கு ஆண்டு தமிழ் நாட்டைப் போன்று மற்ற மாநிலங்கள் குடும்பநலத் திட்டத்தினைத் தீவிரமாக அமல்படுத்தி ஒரு புறத்தில் திட்டத்தில் வெற்றி கண்டு, ஒரு புறம் நாடாளுமன்றத்தில் இடம் இழப்பது நல்லதல்ல. இந்த நிலைமையை உணர்ந்து மத்திய அரசு செயல் படுமென்று நம்புகிறோம்.

திரு. கே. ராஜாராம் : இதை அவர்கள் ஒப்புக்கொள்ளத் தவறினால் குடும்ப நலத் திட்டத்தை உற்சாகத்துடன் நிறைவேற்றுவதில் குறைகள் ஏற்படும், பாதிக்கும் என்று மத்திய அரசிற்கு மாநில அரசு எடுத்துக் கூறுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : குடும்பநலத் திட்டம் என்பது இந்தியா முழுமைக்கு என்றாலும் அதைத் தமிழ் நாடு வெற்றிகரமாக நிறை வேற்றுவதன் காரணமாக இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களை விடத் தீவிர மாக அமல்படுத்துகிறது. அதன் பலனை நல்ல முறையில் அனுபவிப்பதற்கு இங்கே குடும்ப நலத் திட்டம் நல்லமுறையில் செயல் பட்டால்தான் முடியும். நாட்டின் வளத்தைப் பெருக்கும் அதே நேரத்தில் நாடாளுமன்றத்தில் இடத்தை இழக்க நாம் தயாராக இல்லை.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : 1971 கணக்கின்படி வந்தால் நாடாளு மன்றத்தில் எவ்வளவு இடத்தை நாம் இழக்க நேரிடும் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இழக்க இருக்கிறோம் என்றால், இழப்பதற்குத் தயாராகிவிட்டோம் என்று பொருள். இழக்க நேரிடலாம் ஓர் இடத்தை. அதையும் இழக்காமல் இருப்பதற்கு நாம் வாதிடுவோம்.

Cashew Liquor

* 38 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there are any proposals to start a Cashew Liquor Unit at Panruti; and

(*b*) if so, the details thereof ?